# திராவிட மாடல் அரசு 18

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



கீழடி அருங்காட்சியகம் திறப்பு விழாவில்...

## கீழடி... அருங்காட்சியகங்களுக்கு ஒரு ‘மாடல்’!

**வ**ரலாறு என்பது கடந்த காலத்தைக் காட்டும் கண்ணாடி மட்டுமல்ல. வருங்காலத்துக்கான வழிகாட்டியும் ஆகும். நாம் எங்கிருந்து வந்தோம், இன்று இருக்கும் நிலைக்கு எப்படி வந்தோம், இனி இங்கிருந்து நாம் செல்ல வேண்டிய பாதை என்ன என்று நமக்குக் கோடிட்டுக் காட்டும் திசைகாட்டிதான் வரலாறு.

கீழடியிலிருந்து, தமிழ்ச் சமுதாயத்தை, நம் நாகரிகத்தை உயர்த்திப் பிடிக்கும், உலகமே வியக்கும் சில ஆதாரங்கள் கிடைக்கத் தொடங்கியிருந்தபோது, அங்கு நடந்துவந்த அகழாய்வுகளுக்கு ஒன்றிய அரசு ஏற்படுத்திய தடைகள் ஊடகங்களில் வெளியானபோது தான், கீழடி பெரும் வரலாற்றை உள்ளடக்கிய இடம் மட்டுமல்ல... அது ஒட்டுமொத்த **‘தமிழர்களின் அடையாளம்’** என்பது நம்மில் பலருக்கும் புரியத் தொடங்கியது.

அதற்குப் பிறகுதான், வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், சுவடியியல் உள்ளிட்ட துறைகள் குறித்தும், அதுதொடர்பான பாடப் பிரிவுகள் பற்றியும், அந்தத் துறைகளில் உள்ள வேலைவாய்ப்புகள் பற்றியும் பலருக்கும் தெரிய ஆரம்பித்தன.

வரலாற்றுப் பிரியர்கள் பலரும் சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து, தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குச் சுற்றுலா செல்வது, கல்லூரிகளில் கல்வெட்டியல் தொடர்பான பயிற்சிகள் வழங்குவது, கீழடியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் இடம்பெற்ற ‘ஆதன்’, ‘குவிரன்’ உள்ளிட்ட பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்வது என வரலாற்றுத் துறை சார்ந்த விஷயங்களுக்கு முன்னெப்போதையும் விட இப்போது விழிப்புணர்வும் வெளிச்சமும் கூடியிருக்கிறது. ஆக... கீழடி என்பது ஒரு கலாசார மாற்றம் என்று சொன்னால் அது மிகையில்லை!

கீழடி அகழாய்வில் கிடைத்த ஆதாரங்கள், நிகழ்ந்த அரசியல் ஆகியவை காரணமாக, ஏற்கெனவே அகழாய்வு நடைபெற்ற ஆதிச்சநல்லூர், கொடுமணல், பொருந்தல், கொற்கை, அழகன் குளம் போன்ற பகுதிகளின் பக்கம் கவனம் குவிந்தது. மேலும், சிவகளை, மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம், வெம்பக்கோட்டை, துலுக்கர்பட்டி, பெரும்பாலை போன்ற இடங்களிலும் தற்போது முதன்முறையாக அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டு, முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

### சங்ககால நகர்மய வாழ்வியல்!

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் அறிவியல் காலக்கணிப்பு, கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வைகை ஆற்றங்கரையில் நகர்மயமாக்கல் இருந்ததை உறுதிப்படுத்தியது. அதாவது, பண்டைத் தமிழ்ச் சமூகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்றும், நகர நாகரிகத்துடனும் விளங்கியிருக்கிறது.

அங்கு செழித்த நாகரிகம் சுமார் 2,600 ஆண்டுகள் பழமையானது. குறிப்பாக, இங்கு கிடைத்த கருப்பு சிவப்பு வண்ணத்தில் உள்ள மண்பாண்டங்கள்தான் மிக முக்கியமான ஆதாரங்கள். **‘கருப்பு சிவப்புப் பாண்டங்கள்’** இல்லாமல் தமிழ்த் தொன்மங்களைக் கட்டமைக்க முடியாது. இந்த வகைப் பாண்டங்கள் இங்கே மிகுதியாகக் கிடைப்பதால், கீழடியின் ‘முத்திரைப் பாண்டம்’ எனும் தகுதி இவற்றுக்கே உரியது” என்கிறார் தொல்லியல் ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன்.



மண்பாண்டங்களோடு, செங்கல் கட்டுமானங்கள், சுடுமண் வடிகால்கள், உறை கிணறுகள் போன்ற பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனவேதான், சங்க காலம் என்று சொல்லப்படும் கால கட்டத்தின் ‘நகர்மயம் சார்ந்த வாழ்வியலுக்கான தொல்லியல் சான்று கீழடி’ என்று கூறப்படுகிறது.

### அகழாய்வும் ஆரிய திராவிடப் போரும்

தென்னகத்தின், தமிழ்நாட்டின் இந்த மேன்மை, ஒன்றிய அரசின் கண்களை உறுத்தியது. வேதங்களில் **சிந்துவெளி** நகர்மய நாகரிகத்தின் சுவடுகளே இல்லாமல் இருக்கும்போது, வைகை நதி நாகரிகத்தின் உயர்வு பற்றி அவர்களுக்கு என்ன தெரிந்துவிடும்? ‘ஆரியர்களே முதன்மையானவர்கள், மேலானவர்கள்’ என்று கூச்சலிட்ட கூட்டத்துக்கு, தென்னகத்திலே நீண்ட நெடிய பாரம்பரியம் மிக்க ஒரு சமூகம் இருந்தது. அது தமிழ்ச் சமூகமாக இருந்தது என்ற உண்மையை அவர்களால் எப்படி ஜீரணித்துக்கொள்ள முடியும்?

எனவேதான், கீழடி அகழாய்வுக்குப் பல தடைகள். கீழடி அகழாய்வு உண்மைகளை வெளிக் கொண்டு வந்த தொல்லியல் நிபுணர் அமர்நாத் ராமகிருஷ்ணா ஒன்றிய அரசால் பந்தாடப்பட்டார். அந்த சமயத்தில் இங்கிருந்த அ.தி.மு.க. அரசோ வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. அப்போது கீழடிக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்தது தி.மு.க.தான்!

### முன் மாதிரி அருங்காட்சியகம்!

கீழடி மட்டுமல்ல... ஆதிச்சநல்லூர் முதற்கொண்டு திருவண்ணாமலை மாவட்டம், கீழ்நமண்டி வரை இன்னும் அகழ்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆதாரங்கள் பல இருக்கின்றன. அகழாய்வு மேற்கொள்ளும் இடங்களில் எல்லாம் ஓர் அருங்காட்சியகம் வைக்க வேண்டிய தேவைகூட வருங்காலத்தில் ஏற்படலாம். அதற்கெல்லாம் முன்னோட்டமாக அமைந்திருக்கிறது கீழடி அருங்காட்சியகம்.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்கள் உலகத் தமிழர்கள், பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில், 18.43 கோடி ரூபாய் செலவில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ‘கீழடியும் வைகையும்’, ‘நீரும் நிலமும்’, ‘கலம்செய் கோ’, ‘நெசவுத் தொழில் மற்றும் அணிகலன்கள்’, ‘கடல் வழி வணிகம்’ மற்றும் ‘வாழ்வும் வளமும்’ என ஆறு பொருட்களில் காட்சிக் கூடங்கள் இருக்கின்றன.

மேலும், தமிழ்நாட்டின் தொன்மை மற்றும் வரலாற்றினையும், கீழடியின் முக்கியத்துவத்தையும் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் 15 நிமிட ஒளி ஒலிக் காட்சி, குளிரூட்டப்பட்ட அரங்கில் காட்சிப்படுத்தப்படுகிறது.

இந்த அருங்காட்சியகத்தை நேரில் வந்து பார்க்க இயலாத, வெளிநாடுகளில் வாழும் மக்களுக்காக, தங்கள் உள்ளங்கையிலேயே பார்க்க, **‘கீழடி ஆக்மென்ட் ரியாலிட்டி’ எனும் ‘கீழடி புனை மெய்யாக்க செயலி’** ஒன்றையும் தமிழ்நாடு தொல்லியல் துறை உருவாக்கியுள்ளது. இதை கைப்பேசியில் பதிவிறக்கிக் கொண்டு, கீழடி அகழாய்வுகளில் வெளிக்கொணரப்பட்டுள்ள 200 தொல்பொருட்களையும், அகழாய்வுக் குழிகளையும் பார்க்கலாம்.

“தமிழ்நாட்டில் உள்ள பழமையான, பிரபலமான சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் கூட இல்லாத வசதிகள் கீழடி அருங்காட்சியகத்தில் உள்ளன. இங்கு பார்வையாளர்கள் தாங்களாகவே பல விஷயங்களை அறிந்துகொள்ளும் வகையில், ‘இன்டராக்டிவ்’ முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ‘லண்டன் மியூஸியம்’, ‘பாரிஸ் லூமியர் மியூஸியம்’ போன்றவற்றில் இதுபோன்ற ‘இன்டராக்டிவ்’ முறைதான் இருக்கின்றது. அங்குள்ள தரம் இங்கும் உள்ளது.

இந்தியாவில் இது ஓர் புதுமையான முன்னோடியான அருங்காட்சியமாகத் திகழும். வருங்காலத்தில், ‘பொருநை’, ‘கங்கைகொண்டசோழபுரம்’ போன்ற இடங்களிலும் இதுபோன்ற அருங்காட்சியகங்கள் அமைக்கப்படவேண்டும் என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது” என்கிறார் அமர்நாத் ராமகிருஷ்ணா.

கீழடியில் அகழாய்வுக்காக அருங்காட்சியகம் அமைத்தது பெரிய விஷயமில்லை. அதை உலகத் தரத்தில் அமைத்து, இதர அருங்காட்சியகங்களுக்கு ஒரு ‘முன்மாதிரி’யாகக் கட்டியிருப்பதுதான் இதன் புதுமை. அதுதானே ‘திராவிட மாடல்..!’

...சாதனை தொடரும்

❖ இங்கு வேளாண்மை, இரும்புத் தொழில், நெசவு, மணிகள் தயாரித்தல், கடல்வழி வணிகம், மேம்பட்ட சமூகம் மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றுக்கு உரிய விளக்கம் 2 நிமிட அனிமேஷன் படமாகக் காட்டப்படுகிறது.

❖ சூதுபவளக் கற்களால் செய்யப்பட்ட மோதிரக்கல்லின் மாதிரி சுழன்று காணும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


❖ சங்ககால மக்களின் கடல்சார் வணிகத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் சங்ககால கப்பலின் மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது.

❖ குழந்தைகளும் மாணவர்களும் தமிழர் விளையாட்டுகளை, தொடுதிரையில் விளையாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ பொதுமக்கள் தங்களது பெயரினை தொடுதிரையில் எழுதினால், தமிழ் எழுத்தில் தங்களது பெயரைக் காண்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ சிவகங்கைச் சீமையின் மரபுசார் உணவு முறைகளை ஊக்குவிக்கும் வகையில், சிறுதானிய உணவு வகைகளை விற்பனை செய்யும் உணவுக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

## :ப்ளாஷ்பேக்



### ‘குழந்தை’ கலைஞர்!




சந்தானம்

**1991**-ஆம் ஆண்டு மே 1-ஆம் தேதி, மே தின விழாவுடன் சேர்த்துத் தேர்தல் பிரசாரக் கூட்டமும், செங்கல்பட்டு மே தினப் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. என்னுடைய 9 மாத மகனோடு 51 ரூபாய் நிதியையும் கொண்டு சென்றிருந்தேன். மேடைக்குக் கீழே நின்று கொண்டிருந்த எங்களைப் பார்த்து “பையனுக்குப் பெயர் வைக்க வேண்டுமா?” என்று கேட்டார் இன்றைய கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு. “இல்லை, குழந்தையை தலைவர் கையால் தூக்க வேண்டும்” என்றேன். அவர் எங்களை கலைஞரிடம் அழைத்துச் சென்றார். குழந்தையை வாங்கி, மடியில் வைத்துக்கொண்டு கலைஞரும் குழந்தை போல் சிரிக்கும் இப்புகைப்படம் எனக்குக் கிடைத்த பொக்கிஷம்.

**-சி.சந்தானம், வேங்கைவாசல் ஊராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### சாதியம் : பெருமையும், எதிர்ப்பு மரபும்!




**சா**திக்கு எதிராக நடைபெற்ற சட்டப் போராட்டங்களையும், சாதியை எதிர்த்துப் போராடிய ஆளுமைகளையும் பற்றி ‘கேஸ்ட் ப்ரைட்: பேட்டில்ஸ் ஃபார் ஈக்குவாலிட்டி இன் ஹிண்டு இந்தியா’ (Caste Pride: Battles for Equality in Hindu India) என்ற தலைப்பிலான நூல் ஒன்று, கடந்த 19-ஆம் தேதி அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வெளியிடப்பட்டது.

நூல் வெளியீட்டின்போது, நூலாசிரியர் மனோஜ் மிட்டா, “அண்ணா நூற்றாண்டு நூலகம் போன்று பிரமாண்டமான ஒரு நூலகத்தை இந்தியாவில் நான் பார்த்ததில்லை” என்று குறிப்பிட்டார்.

நூலை வெளியிட்டுப் பேசிய விடுதலை ராசேந்திரன், இந்திய அளவில் பார்ப்பனீயச் சிந்தனைக்கு எதிராக நடைபெற்ற சட்டப் போராட்டங்களைக் குறிப்பிட்டுப் பேசினார். 716 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் 200க்கும் மேற்பட்ட பக்கங்கள் தமிழ்நாட்டைப் பற்றிப் பேசுவதாகக் குறிப்பிட்டார் மக்களவை உறுப்பினர் ரவிக்குமார்,


“அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு முரணாக இருக்கும் சனாதன தர்மத்தை மீண்டும் நிறுவத் துடிக்கும் ஆதிக்க சக்திகளுக்கு எதிராகச் சமரிட இது போன்ற புத்தகங்கள் உதவும்" என்றார் ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு. ஒன்றரை நூற்றாண்டு சாதி ஒழிப்பு மரபைக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டில் இது போன்ற புத்தகங்கள் வெளியிடப்படுவது ஆரோக்கியமானது.

### கருவூலம்

#### அண்ணாவின் வழியில் உழைப்போம்!

**1971-ஆம் ஆண்டு கலைஞர் ஆற்றிய வானொலி உரையில்,“சாதாரணமானவர்கள் நாங்கள், சாதாரண மக்களுக்காக உழைப்பதற்கு முன் வந்திருப்பவர்கள். எங்களை ஆளாக்கிய எங்கள் அண்ணன் ‘எதையும் தாங்கும் இதயம்’ கொண்டு கடமை போற்றி, கண்ணியம் வளர்த்து, கட்டுப்பாடு குலையாமல் நடப்பதற்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அந்த அண்ணனின் வழிநின்று அயராது உழைப்போம். தமிழகத்தின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம்" என முழங்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 125




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131